(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 10.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 பெப்ரவரி 23 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

கௌரவ **ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ **அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

கௌரவ **மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

கௌரவ **மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

கௌரவ **உதய கம்மன்பில,** வலுசக்தி அமைச்சர்

கௌரவ **தினேஷ் குணவர்தன,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **(கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

கௌரவ **எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

கௌரவ **நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

கௌரவ **வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

கௌரவ **ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

கௌரவ **சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

கௌரவ **நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **விமல் வீரவங்ச,** கைத்தொழில் அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ நஸீர் அஹமட்**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ ஹரின் பிரனாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ ஜோன் செனவிரத்ன

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ சமன்பிரிய ஹேரத்

கௌரவ மர்ஜான் பளீல்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

“ 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் புலனாய்வு செய்து அறிக்கையிடுதல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சபையின் விசேட அனுமதியுடன் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 2021.02.25 ஆம் திகதி சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் மேற்படி ஆணைக்குழுவின் நடவடிக்கைக் குறிப்புகளின் 87 தொகுதிகள் 2022.02.22 ஆம் திகதி என்னிடம் கையளிக்கவும்பட்டன. அதன் பிரகாரம், கீழே தரப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட அறிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிசீலனைக்காக பாராளுமன்ற நூலகத்தில் வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதை இக் கௌரவ சபைக்கு அறியத்தர விரும்புகின்றேன்:-

தொகுதி 2 – I – வெளிப்படையான சான்றுகள், A தொடக்கம் W வரையும்;

தொகுதி 2 – II – இரகசிய சான்றுகள், A தொடக்கம் D வரையும்;

தொகுதி 2 – III – ஒரு பகுதி வெளிப்படையான, ஒரு பகுதி இரகசிய சான்றுகள், A தொடக்கம் L வரையும்;

தொகுதி 3 – சான்றுகளுக்கு உரியதாக “C ” என அடையாளமிடப்பட்ட ஆவணங்கள், 3 – I தொடக்கம் 3 – XVIII – C வரையும்;

தொகுதி 4 – சான்றுகளுக்கு உரியதாக “X ” என அடையாளமிடப்பட்ட ஆவணங்கள், 4 – I தொடக்கம் 4 – VI வரையும்; மற்றும்

தொகுதி 5– சான்றுகளுக்கு உரியதாக ஒவ்வொரு சாட்சியாளரினால் அடையாளமிடப்பட்ட ஆவணங்கள், 5 – I தொடக்கம் 5 – VII வரையும் ஆகும்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2015 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XVI ஆம் பகுதியையும் ;

(ii) 2016 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXIX ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXI ஆம் பகுதியையும்;

(iii) 2017 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XXIV ஆம் பகுதியையும்;

(iv) 2018 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXXVI மற்றும் XXXVII ஆம் பகுதிகளையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXIX ஆம் பகுதியையும்;

(v) 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXXII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXIII, XXIV மற்றும் XXV ஆம் பகுதிகளையும்; மற்றும்

(vi) 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XVIII, XIX, XX, XXI, XXII மற்றும் XXIII ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் XI, XII மற்றும் XIII ஆம் பகுதிகளையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் VIII, IX மற்றும் X ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2022 பெப்ரவரி 21 ஆம் திகதிய 2268/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தினைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) கல்வி அமைச்சர், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கைத்தொழில் அமைச்சர், 2018/2019 ஆம் ஆண்டுக்கான பிசீசீ லங்கா கம்பனியின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015/2016, 2016/2017 மற்றும் 2017/2018 ஆம் ஆண்டுகளுக்கான ஜீ.எஸ்.எம்.பி டெக்னிக்கல் சர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட்டின வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52(6) இன் கீழ் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் :** “சிசிர ஜயகொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்)” சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52(6) இன் கீழ் அறிக்கையைக் கல்வி அமைச்சர் சமர்ப்பித்தார்.

சட்டமூலம் 2022 பெப்ரவரி 24 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனக் கட்டளையிடப்பட்டது.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) கொட்டியகாகும்புர, குருணேகொட, டி. 113 இல் வதியும் திரு. ஜி.எம்.சி.எச். குணசேனவினது 2021.11.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரன்ஜித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்தார்.

(2) பதுளை, மீகஹகிவுல, அராவ, கலஉட இல்லம் எனும் முகவரியில் வதியும் திருமதி எஸ். சுனேத்ரா ஹேமமாலியினது 2021.10.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ தேனுக விதானகமகே சமர்ப்பித்தார்.

(3) ஹொரண, கனன்வில, கஹடபிட்டிய, ஹுணுகொட்டுவவில் வதியும் திரு. ஜே.டி. உபசேனவினது 2021.10.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன சமர்ப்பித்தார்.

(4) மெனிக்திவெல, கோனதெனிய, அம்பகஸ்தென்ன, இல. 57 இல் வதியும் திருமதி டி.பி. நில்மினி புஷ்பலதாவினது 2021.11.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வஸந்த யாபாபண்டார சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. *சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதிகோரும் பிரேரணைகள்:*** பாராளுமன்ற பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்,— அரசியலமைப்பின் 66 (ஊ) உறுப்புரையின் கீழ், பொலன்னறுவை தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரொசான் ரணசிங்க அவர்களுக்கு 2022 பெப்ரவரி 23 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணையை சமர்ப்பித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. புலமைச் சொத்து (திருத்தம்):** வர்த்தக அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வரும் சட்டமூலத்தைச் சமர்ப்பித்தார்,— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்து சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2022 மார்ச் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (தற்போதைய நெருக்கடி நிலைமையைத் தீர்ப்பதற்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குமான வேலைத்திட்டம்) :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(மு.ப. 11.32 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக” என கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.26 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

“கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்குவாராக” என சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.42 மணிக்கு கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்கினார்.)

அப்போது கூட்ட நடப்பெண்ணின்மை அக்கிராசனத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டமையால், பாராளுமன்றம் கணக்கிடப்பட்டது. கூட்ட நடப்பெண்ணின்மை காரணமாக தலைமை தாங்கும் உறுப்பினரால், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 11 இன் பிரகாரம் பி.ப. 5.27 மணிக்கு, 2022 பெப்ரவரி 24 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணி வரை வினாவின்றிப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.